ජනාධිපති කාර්යාලය
சனாதிபதி அலுவலகம்
PRESIDENTIAL SECRETARIAT

சுற்றுநிருப இல: PS/GPA/Circular/21/2020
14.05.2020

அமமைச்சுச் செயலாளர்ககள்
பிரதான செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்டச் செயலாளர்கள்
பிரதேசச் செயலாளர்கள்
கூட்டுத் தாபன/ நியதிச் சட்ட சபைத் தலைவர்கள் ஆகியோருக்கு

**COVID -19 உலகளாவிய தொற்றுக் காலத்தில் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் அமைந்துள்ள அரசாங்க நிறுவனங்களின் பன்முகப்பபடுத்தப்பட்ட தொழிற்பாடு வாயிலாக மிக அதிகளவான சேவையை வழங்குதல்**

படிப்படியாக வழமை நிலைக்கு திரும்புவதற்கு வசதியேற்படுத்துமுகமாக, தற்போது நாட்டில் பிறப்பிக்கப்பட்டுள்ள COVID-19 தொடர்புபட்ட கட்டுப்பாடுகளை அரசாங்கம் மேலும் தளர்த்தியுள்ளது. எனினும், பாடசாலைகளை மீளத் திறத்தல், போக்குவரத்து முறைமைகளை மீள் ஒழுங்கமைத்தல், நகர்ப்புற தொழிற்படு ஏற்பாடுகளின் நெரிசலைத் தவிர்த்தல் ஆகியன சவால்மிக்க பிரச்சினைகளாக உள்ளமையால், வழமை நிலைக்கு மாறுவதற்குக் காலம் எடுக்கும். அரசாங்க சேவை வழங்கல் ஏற்பாடுகள் இன்னமும் குறிப்பாக கொழும்பு மற்றும் கம்பாஹா மாவட்டங்கள் முதலிய சில பகுதிகளிலே மத்தியப்படுத்தப்பட்டு காணப்படுகின்றன. அதற்கமைய, நகரங்களுக்கு மக்கள் பெருமளவில் திரண்டு வருவதை குறைக்குமுகமாக அரசாங்க சேவைகள் பன்முகப்படுத்தப்படவுள்ளன. எனவே, அமைச்சுக்கள் மற்றும் கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள அரசாங்க நிறுவனங்கள் மற்றும் நியதிச்சட்ட கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றின் கீழான தலைமையக தொழிற்பாடுகள் பின்வரும் வழிகாட்டு நெறிகளைப் பின்பற்றலாம்:

## 1.0 சேவை வழங்கல் ஏற்பாடுகள்

i. அரசாங்க நிறுவனங்கள் எவ்விடத்தில் அமைந்திருப்பினும், அவை தமது சேவைகள் எப்போதும் வழங்கப்படுவதை உறுதிப்படுத்தலாம். நாட்டின் அனைத்துப் பிராந்தியங்களிலும் வினைத்திறன்மிக்க சேவை வழங˙கல் இடம்பெறவது காலத்தின் தேவையாகும். எனவே, பன்முகப்படுத்தப்பட்ட பிராந்திய அலுவலகங்களுக்கு பொருத்தமான அதிகாரப் பகிர்ந்தளிப்போடு நாட்டிலுள்ள அரசாங்க நிறுவனங்களின் உச்சளவு கொள்திறன் பயன்படுத்தப்படமுடியும்.

ii. பின்னிணைப்பு I இல் இனங்காணப்பட்டுள்ளவையும், தமது பிராந்திய அலவலங்கள் மற்றும் மாவட்ட/பிரதேசச் செயலகங்கள் ஊடாக பன்முகப்படுத்தல் செயற்பாடுகளைச் மேற்கொள்ளக்கூடியவையுமான கொழும்பிலும் அதன் புறுநகர்ப்பகுதிகளிலும் அமைந்துள்ள நிறுவனங்களின் தலைவர்கள் தலைமையகத்தில் உயர்மட்ட மற்றும் கட்டாய பணிகளை மாத்திரம் நிறைவேற்றுவதற்காக மிகக்குறைந்தளளவு ஆளணியைப் பேணுகின்ற அதேவேளை, இத்தகைய அலுவலகங்களுக்கு தமது ஆளணியை மீளமர்த்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும். இப் பணியேற்பாடானது, பயணக் கட்டுப்பாடுகள் நிறைந்த இக்காலப்பகதியில் பொதுமக்கள் கூடிய வசதியோடு தமது சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு உதவுவதோடு, கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களில் மக்கள் மற்றும் வாகன நெரிசலை குறைக்கவும் உதவும்.

iii. அதற்கமைய, வழமையாக தலைமையகத்தில் நிறைவேற்றப்படும் சேவை வழங்கல் பணிகள் இப்பணியேற்பாட்டின்கீழ் முடிந்தவரை அதிகூடிய அளவிற்கு பன்முகப்பபடுத்தப்பட்ட அலுவலகங்களுக்கு மாற்றப்படவேண்டும். அதேநேரம், நிறுவனங்களின் சேவை வழங்கல் பணிகளுள் பெரும்பாலானவை தற்போது நாட்டின் வேறு பகுதிகளில் இடம்பெறுமாகையால், தலைமையகத்தில் பணியாற்றும் குறைந்தளவு பணியாள்



காலி முகத்திடல், கொழும்பு 01
Galle Face, Colombo 01
தொலைபேசி Telephones ++ 94 (0) 11 2354418 ++ 94 (0) 11 2473873
தொலைநகல் Fax ++ 94 11 2446657
மின்-அஞ்சல் e-mail prsec@presidentsoffice.lk

தொகுதியில் உள்ளடக்கப்படாத பணியாளர்கள் பன்முகப்படுத்தப்பட்ட அலுவலகங்களுக்கு மீளர்த்தப்படவேண்டும். அத்தகைய மீளர்த்தலானது, பணியாளர்களை அவர்தம் வசிப்பிடங்களுக்கு மிக அண்மையிலமைந்துள்ள பன்முகப்படுத்தப்பட்ட அலுவலகங்களில் அமர்த்தும் சாத்தியப்பாட்டைக் கவனத்தில்கொள்ள வேண்டும்.

iv. நிறுவனத் தலைவர்கள் தேவையானவிடத்து சம்பந்தப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட அலுவலவங்களுக்குப் பொறுப்பாக உள்ள உத்தியோகத்தர்களுக்கு அதிகாரங்களை சட்டரீதியானதொரு முறையில் பகிர்ந்தளிக்கலாம். பன்முகப்படுத்தப்பட்ட அலுவலக்ங்களுக்குப் புதிதாக ஒப்படைக்கப்படும் பணிகளை நிறைவேற்றும் அதேவேளை, அங்கு ஒன்றுதிரண்டுள்ள மற்றும் பூர்த்தி செய்யப்படாதுள்ள வேலைகள் அனைத்தும் ஒரு நியாயமான காலப்பகுதியினுள் பூர்த்தி செய்யப்படவேண்டும்.

v. தலைமையகத்திற்கும் பன்முகப்படுத்தப்பட்ட அலுவலகங்களுக்குமிடையேயான தொடர்பாடல்களுக்கும் கடிதத் தொடர்புகளுக்கும் வசதியேற்படுத்துமுகமாக நிறுவனத் தலைவர்கள் இணையம், வலைத்தள பிரயோகம் மற்றும் மென்பொருள் கருவிகள் முதலிய டிஜிட்டல் சாதனங்களைப் பயன்படுத்திக்கொள்ள அல்லது அறிமுகப்ப்டுத்தவும் வேண்டும்.

vi. கொழும்பில் ஒரு குறைந்தளவு ஆளணியினரைப் கொண்டிருக்கவேண்டியிருக்கும் அமைச்சுக்கள் அல்லது வேறு நிறுவனங்கள் விடயத்தில், ஒரு குறிப்பிட்ட தினத்தில் ஒரு மட்டுப்படுத்தப்பட்டளவு ஆளணியினரே சமுகமளித்திருக்கும் வண்ணம் தமது பணியாள் தொகுதியை கட்டங்கட்டமாக அட்டவணைப்படுத்துமாறு அத்தகைய நிறுவனங்களின் தலைவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். எனவே, அத்தகைய அலுவலகங்களில் ஒரு சுழற்சி அடிப்படையில் ஆளணியில் சராசரியாக 1/3 பங்கினரே வேலைக்குச் சமுகமளிப்பர்.

vii. புதிய சேவை வழங்கல் ஏற்பாடுகள் மற்றும் சேவை வழங்கல் மையங்கள் தொடர்பாக பொதுமக்ளுக்கு வெகுசன ஊடகம் மற்றும் ஏனைய தொடர்பாடல் சாதனங்கள் ஆகியவற்றின் மூலம் போதியளவில் அறிவிக்கப்படவேண்டும்.

viii. பொதுச் செலவினங்களைக் மட்டுப்படுத்துவதற்கு கண்டிப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பதனால், மீளமர்த்துகையிலிருந்து எழும் பணி ஏற்பாடுகளுக்காக மேலதிக செலவினம் எதுவும் செய்யப்படலாகாது. பன்முகப்படுத்தப்பட்ட அலுவலகங்களில் மீளர்மர்த்த்ப்பட்ட பணியளருக்குத் தேவையான சாதனங்கள்/ வசதிகள் வாகனங்கள் மற்றும் கனணிகள் முதலியன உள்ளிட்ட கிடைக்கக்கூடியதாக உள்ள வளங்களின் மீள்விநியோகத்தினால் ஒருங்கிணைக்கப்படவேண்டும்.

ix. “COVID-19 தொற்று காலத்தில் வழமையான நாளாந்த செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பதற்காக மாவட்டங்களை திறக்கும் காலப்பகுதியில் அரசாங்க அலுவலகங்களினால் கடைபிடிக்கப்படவேண்டிய வழிகாட்டுநெறிகள்” என்ற தலைப்பில் சனாதிபதியின் செயலாளரினால் விடுக்கப்பட்ட PS/GPA/ Circular/20/2020 ஆம் இலக்க 2020.04.18 ஆம் திகதிய சுற்று நிருபத்தில் அடங்கியுள்ள பொருத்தமான ஏற்பாடுகள் மற்றும் சமூகத்தில் COVID-19 பரவலைத் தடுக்குமுகமாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் விடுக்கப்பட்ட வழிகாட்டு நெறிகள் ஆகியவற்றுக்கான உங்களது இயைந்தொழுகலும் கோரப்படுகிறது.

ஒப்பம்.:. **பி பீ ஜயசுந்தர**
சனாதியின் செயலாளர்

பிரதி: **பிரதம மந்திரியின் செயலாளர்**
**அமைச்சரவைச் செயலாளர்**
**கணக்காய்வாளர் நாயகம்**

## Government Institutions in Colombo & Gampaha Districts

| Ministry | Agency | Location | Staff Strength | Proposed operational mode post Covid19 |
|---|---|---|---|---|
| **M/ of Lands & Land Development** | 1. Land Commissioner General Department | Battaramulla | 235 | 4 regional centers |
| | 2. Surveyor General Department | Colombo 5 | 590 | 34 regional centers |
| | 3. Land Settlement Department | Battaramulla | 150 | 48 regional centers |
| | 4. Land Reform Commission | Battaramulla | 232 | 22 regional centers |
| | 5. Department of Land Use Policy Planning | Colombo 5 | 65 | 25 district offices |
| **M/Roads and Highways** | 6. Road Development Authority | Battaramulla | 1401 | Provincial offices and Chief Engineer's office in the divisions |
| **M/Urban Development , Water Supply and Housing Facilities** | 7. Department of Buildings | Battaramulla | 261 | Divisional offices and via project sites |
| | 8. National Water Supply and Drainage Board | Dehiwala- Mount Lavinia | 850 | Regional Support Centers and via project sites |
| | 9. State Engineering Corporation | Colombo 02 | 870 | Project sites |
| | 10. State Development & Construction Corporation | Dehiwala- Mount Lavinia | 415 | Project sites |
| | 11. Department of National Community Water Supply | Thalawathugoda | 68 | Regional offices |
| **M/Transport Services Management** | 12. Motor Traffic Department | Colombo 05 | 191 | 21 District Offices |
| | 13. National Transport Medical Institute | Nugegoda | 66 | 18 Regional Centers island- wide |
| **M/of Environment and Wildlife Resources** | 14. Coast Conservation Department | Colombo 10 | 100 | 9 District Offices |
| | 15. Department of Wildlife Conservation | Battaramulla | 221 | 10 Assistant Director Offices |
| | 16. Forest Conservation Department | Battaramulla | 215 | 5 Regional Offices |
| | 17. Geological Surveys & Mines Bureau | PitaKotte | 272 | 21 Regional offices |
| | 18. State Timber Corporation | Battaramulla | 270 | 12 Regional Offices and 4 Complexes |
| | 19. Central Environmental Authority | Battaramulla | 320 | 16 District Offices |
| **M/Sports & Youth Affairs** | 20. National Youth Services Council | Maharagama | 380 | On-line training sessions |
| | 21. National Youth Corps | Colombo 7 | 90 | Island-wide network of 50 centers. |
| **M/Mahaweli, Agriculture, Irrigation and Rural Development** | 22. Department of Irrigation | Colombo 7 | 564 | 15 District and Divisional Irrigation offices and at project sites |
| | 23. Mahaweli Authority of Sri Lanka | Colombo 10 | 466 | Regional Centers and at project sites |
| | 24. Department of Agrarian Development | Colombo 7 | 288 | District and Divisional offices |
| | 25. Water Resources Board | Colombo 7 | 107 | Project Sites |
| | 26. Central Engineering Consultancy Bureau | Colombo 7 | 985 | Project Sites |
| | 27. Agriculture and Agrarian Insurance Board | Nugegoda | 94 | District / Divisional offices |
| | 28. Department of Immigration & Emigration | Battaramulla | 1061 | 04 Regional offices and by appointment only at Head Office |
| **M/ Women & Child Affairs and Social Security** | 29. Department of Probation & Childcare Services | Battaramulla | 54 | District and Divisional Offices and Provincial depts. |
| | 30. Department of Social Services | Battaramulla | 76 | Regional offices and District/ Divisional Secretariats and Provincial depts. |
| | 31. Department of Samurdhi Development | Battaramulla | 385 | Samurdhi District offices and Divisional Secretariats |

| | | | | |
|---|---|---|---|---|
| **M/of Buddhasasana , Cultural and Religious Affairs** | 32. Department of Archaeology | Colombo 7 | 238 | 04 Regional centers and at project sites |
| | 33. Central Cultural Fund | Battaramulla | 138 | Regional offices and at project sites |
| | 34. Department of Cultural Affairs | Battaramulla | 182 | District Cultural Centers and via District and Divisional Secretariats |
| | 35. Department of Buddhist Affairs | Colombo 7 | 115 | Divisional Secretariats |
| | 36. Department of Hindu Religious Affairs | Colombo 5 | 53 | Divisional Secretariats |
| | 37. Department of Christian Religious Affairs | Colombo 8 | 24 | Divisional Secretariats |
| | 38. Department of Muslim Religious and Cultural Affairs | Colombo 10 | 54 | Divisional Secretariats |
| **M/Fisheries & Aquatic Resources** | 39. Department of Fisheries | Colombo 10 | 253 | 15 District Fisheries Offices. |
| | 40. National Aquaculture Development Authority | Battaramulla | 102 | 12 Aquaculture Development Centers, 25 Aquaculture Extension Offices and other Regional offices |
| | 41. Ceylon Fishery Harbors Corporation | Colombo 15 | 285 | Regional Harbors |
| | 42. Ceylon Fisheries Corporation | Colombo 15 | 242 | Regional centers |
| **M/Industries and Supply Chain Management** | 43. Department of Textile Industries | Colombo 10 | 42 | Provincial Textile Departments, and via 16 training schools. |
| | 44. National Gem and Jewellery Authority | Colombo 3 | 150 | Regional Centers in Eheliyagoda, Matara, Monaragala, Ratnapura and Naula |
| | 45. Industrial Development Board | Moratuwa | 238 | 25 District Offices |
| **M/of Internal Trade, Food Security and Consumer Welfare** | 46. Department of Cooperative Development | Colombo 10 | 115 | Provincial Commissioners and Provincial Cooperative Development Departments |
| **M/Skills Development Employment and Labor Relations** | 47. Department of Labor | Colombo 5 | 730 | 40 District Branches. |
| | 48. Department of Manpower & Employment | Battaramulla | 80 | 481 officers attached to District/Divisional Secretariats |
| | 49. Vocational Training Authority | Colombo 5 | 200 | 208 VT Centers island-wide |
| **M/of Defence** | 50. Department of Registration of Persons | Battaramulla | 545 | Divisional Secretariats. |
| **M/of Finance, Economic and Policy Development** | 51. Department of Census and Statistics | Battaramulla | 576 | District offices |
| **M/Public Administration, Home Affairs, Provincial councils & Local Government** | 52. Department of Registrar General | Battaramulla | 220 | Zonal offices and District and Divisional Secretariats. |
| | 53. Department of Pensions | Colombo 10 | 399 | Divisional Secretariats. |
| **M/Industrial Export and Investment Promotion** | 54. Sri Lanka Export Development Board | Colombo 02 | 196 | 4 Provincial Offices in Jaffna, Kurunegala, Kandy and Matara |

--End--